
சைகை காட்டும் பூனை

ஜப்பானியர் நாட்டுப்புற கதை

கோகோ நிஷிஸுகா

தமிழில் கிருஷ்ணன்

படங்கள் ரோசான் லிட்சிங்கர்




வெகு காலத்திற்கு முன்பு கடற்பகுதியின் அருகே இருக்கும் ஒரு கிராமத்தில் ஒரு பூனை யோஹே வின் வாசலில் வந்து நின்றது. யோஹே வறுமையில் வாடிய போதும் அந்த பூனைக்கு அன்றிரவு தனது உணவை பகிர்ந்து கொடுத்தான். யோஹே வின் தந்தைக்கு உடல் நலம் குறைந்த போது அவன் கவலையுற்று இருந்தான் தான் எப்படி மீன் விற்க போவதென்று? அப்போது அந்த நன்றி மறவாத வெள்ளை பூனை தனது சாதுரியத்தால் யோஹே விற்கு எப்படி உதவியது என்பதே இக்கதை.


சைகை காட்டும் பூனை

கோகோ நிஷிஸுகா

தமிழில் கிருஷ்ணன்

படங்கள் ரோசான் லிட்சிங்கர்








வெகு காலத்திற்கு முன்பு கடற்பகுதியின் அருகே இருக்கும் ஒரு கிராமத்தில் ஒரு சிறுவன் வசித்து வந்தான். அவன் பெயர் யோஹே. ஒவ்வொரு நாளும் கடலில் சூரியன் உதிக்கும் போதும் அவன் எழுந்து மீன்கள் வாங்குவதற்கு துறைமுகத்திற்கு செல்வான். பின்னர் வாங்கி வந்த மீனகளை வீடு வீடாக சென்று விற்பான். மீன்களை மூங்கில் தடியில் இரண்டு பக்கமும் மரத்தில் ஆன பீப்பாயில் எடுத்து செல்வான். யோஹே ஒரு நல்ல உழைப்பாளி ஆனாலும் அவனை வறுமை வாட்டியது.



யோஹே வின் தந்தைக்கு உடல் நலம் குறைந்து போக, தந்தையின் மருத்துவ செலவிற்கு தேவையான பணத்தை ஈட்டுவதற்கு அவன் இன்னும் கடுமையாக உழைத்தான். எவ்வளவு உழைத்தாலும் இரண்டு பீப்பாய் அளவிற்கான மீன்களையே அவன் எடுத்து செல்ல முடிந்தது. அதை நினைத்து ஏங்கி அவன் எப்போதும் கவலையில் ஆழ்ந்து போவான்.



ஒரு மாலை பொழுதில் நல்ல மழை பெய்து கொண்டிருக்கும் போது யோஹே அடுப்பில் அரிசியை வேக வைத்து கொண்டிருந்தான். அப்போது யாரோ கதவை தட்டுவது போன்று உணர்ந்தான். அவன் சென்று கதவை திறந்த போது ஒரு பூனை குளிரில் நடுங்கி கொண்டிருந்தது. அதன் வெள்ளை ரோமத்தில் சேர் அடித்திருந்தது. யோஹே வை பார்த்து தான் உள்ளே வரலாமா என்று கேட்பதை போல “மியாவ் மியாவ்” என்று கத்தியது.

“ பாவம் இந்த பூனை “ என்று சொல்லி அந்த பூனையை வீட்டின் உள்ளே விட்டான் அதன் மேல் இருந்த சேற்றையும் ஒரு துண்டை கொண்டு துடைத்து விட்டான். தன் தந்தைக்கு உணவை பரிமாறிய பின் தனது தட்டில் இருந்த உணவிலிருந்து சிறிது அரிசியையும், பாதி மீன் வருவலையும் எடுத்து பூனை உண்பதற்கு வைத்தான்.




பூனை தின்று முடித்த பின் யோஹே வின் மடியில் வந்து ஏறிக்கொண்டது அப்பூனை தனது மெலிய ரோமத்தை அவன் மீது உரசி கொண்டு நின்றது. தனது உணவை பகிர்ந்து கொண்டதால் அவனை பசி அரித்து கொண்டிருந்தது ஆனால் பூனையின் ரோமம் அவன் மீது பட்டவுடன் அவனுக்கு சுகமாக இருந்தது. அடுத்த நாள் காலை தடயமே இல்லாமல் பூனை காணாமல் போனது.



மூன்று நாள் கழித்து யோஹே ஊரில் மீன் விற்று கொண்டிருந்தான். அப்போது அவனுடைய பக்கத்துக்கு வீட்டுகாரர் மாசா அவனை நோக்கி ஓடி வந்தார். “யோஹே உடனே நீ வீட்டுக்கு வா, உன் அப்பாவுக்கு அதிகமாக காய்ச்சல் அடித்து கொண்டிருக்கிறது!”





பீப்பாய் நிறைய மீன்களை எடுத்து கொண்டு யோஹே வீட்டை நோக்கி விரைந்தான். அவன் வீடு வந்தடைந்த போது அந்த பூனை கதவின் அருகிலேயே நின்று கொண்டிருந்தது. யோஹே தன் அப்பாவை நோக்கி ஓடினான், உடனே ஈர துணியை நனைத்து அவர் நெற்றியில் வைத்தான். அவன் அப்பா சிறிது அமைதியான பிறகு மீன்கள் நிறைந்த பீப்பாயை பார்த்து பெருமூச்சு விட்டான். "நான் என்ன செய்ய? இன்று என்னால் மீன்கள் விற்க போக முடியாதே, எல்லா மீன்களும் நாளை கெட்டு போகி விடுமே. நான் என்ன செய்ய போகிறேன் என்று புலம்பினான்."





திடீரென்று யாரோ கதவை தட்டுவது போன்று இருந்தது. கதவை திறந்த போது அழகிய வண்ணங்கள் கொண்ட கிமோனோவை அணிந்த ஒரு இளம் பெண்
யோஹே வின் முன் நின்றிருந்தார்.
“ஹலோ நான் எப்படி உங்களுக்கு உதவ முடியும்” என்றான் ஆச்சர்யத்துடன் யோஹே
நீங்கள் மீன் விற்பவரா? என்று கேட்டார் அந்த பெண்மணி பீப்பாயில் உள்ள மீன்களை பார்த்து கொண்டே. “ஒரு பூனை வாடிக்கையாளரை மீன் விற்பவரின் வீட்டிற்கே நேராக கூட்டி வருவது எவ்வளவு பெரிய விந்தை” என்று சொல்லி அவர் மெலிதாக சிரித்தார் தன் கிமோனோவால் வாயை பொத்தி கொண்டே.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே எனக்கு புரியவில்லை என்றான் யோஹே

இந்த வெள்ளை பூனை உங்கள் பூனை தானே? நான் தையல் பள்ளியிலிருந்து வெளியே வரும் போது இந்த பூனை என்னை பார்த்து "மியாவ் மியாவ்" என கத்தியது. பிறகு சிறிது தூரம் சென்று மீண்டும் தன் கைகளை கொண்டு என்னை அழைப்பது போன்று செய்கை செய்தது. அதன் செயல் என்னை கவர்ந்து போயிற்று. அதனாலேயே அப்பூனையை பின் தொடர்ந்து வந்தேன்.





பூனையின் செயல் யோஹே வுக்கு இன்ப அதிர்ச்சி தந்தது. அவன் அப்பெண்மணிக்கு எப்படி இந்த பூனை தன்னிடம் வந்து சேர்ந்தது என்று விளக்கினான்.
“எவ்வளவு சாதுரியமான பூனை !” என்று சிரித்துக்கொண்டே கூறினார் அப்பெண்மணி. உன்னிடம் இருக்கும் மீன்களை வாங்குவதற்கே என்னை இங்கு அழைத்து வந்திருக்கிறது. பின்னர் அவர் யோஹே விடம் தனக்கு மூன்று மீன்களை கட்டிக்கொடுக்குமாறு சொன்னார். யோஹே அவருக்கு தலை வணங்கி நன்றி கூறினான்.





இன்னும் கொஞ்ச நேரத்திலேயே யாரோ கதவை தட்டுவதை போல உணர்ந்தான் யோஹே. அவன் கதவை திறந்த போது பக்கத்துக்கு ஊரிலுள்ள பெரிய கடையின் முதலாளி தன் முன் நிற்பதை பார்த்தான்.

“வணக்கம் ஐயா. நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?” என்றான் யோஹே. இவ்வளவு பெரிய மனிதர் தன் வீட்டின் முன்னே வந்து நிர்ப்பதை அவனால் நம்ப முடியவே இல்லை.

“உன் பூனை தான் என்னை இங்கு அழைத்து வந்தது” என்றார் அந்த வியாபாரி ஆச்சர்யத்துடன் கண்களை உயர்த்தி கொண்டே.

நான் மீன்களை பற்றி பேசி கொண்டிருந்ததை அது கேட்டிருக்க கூடும் என்றார் அவர்.

“மீன்களை பற்றியா” என்றான் யோஹே

இன்று காலை என் மருமகள் ஒரு ஆண் பிள்ளையை ஈன்றிருக்கிறாள். என் பேரன் பிள்ளைக்காக ஒரு விழா ஏற்பாடு செய்து உள்ளேன். அந்த விருந்துக்கு பத்து பெரிய மீன்கள் தேவைப்படுகிறது. நான் என் வீட்டிலிருந்து புறப்பட்ட சற்று நேரத்திலேயே உன் பூனை என்னை நோக்கி மியாவ் மியாவ் என்று அதன் பாதங்களினால் சைகை செய்து அழைத்தது என்று பூனை செய்ததை போலவே செய்து காட்டினார். “என்னால் அதனை பின் தொடராமல் இருக்க முடியவில்லை. இங்கே வந்தால் நான் தேடிய மீன்களெல்லாம் உன்னிடம் இருக்கிறது!.”


யோஹே வுக்கு நம்பவே முடியவில்லை. அவன் வியாபாரியிடம் எப்படி திடிரென்று தன் தந்தைக்கு உடம்பு முடியாமல் போனதென்றும், எப்படி பூனை தன்னை வந்து சேர்ந்தது என்றும் அவரிடம் விவரித்தான்.





“அட கடவுளே” என்ன அதிசயம் உன் பூனை வாடிக்கையாளர்களை உன்னிடமே அழைத்து வருகிறது. “மனிதர்களே நன்றியில்லாமல் இருக்கும் இக்காலத்தில் ஒரு பூனை இந்தளவிற்கு நன்றியுடன் இருப்பது அதிசயமே ! “ என்றார். அதன் பின் வெள்ளி நாணயம் ஒன்றை எடுத்து யோஹே விடம் கொடுத்தார். அந்த காசை வைத்து ஒரு பீப்பாய் நிறைய மீன் வாங்க முடியும். “மீன்களுக்கான காசை வைத்து கொள் என்று யோஹேவிடம் கூறினார். சில்லறையை நீயே வைத்து கொள் உன் தந்தையை நன்கு பார்த்து கொள்” என்று கூறிவிட்டு சென்றார். யோஹே அவருக்கு நன்றி கூறி தலை வணங்கி நின்றான்.





பூனையின் அழைப்பில் ஒன்றன்பின் ஒன்றாக மக்கள் யோஹே வின் வீட்டிற்கு வந்தனர். மதிய நேரத்திற்குள் இரண்டு பீப்பாய் மீன்களும் காலியாகி விட்டன. வாடிக்கையாளர்கள் அனைவரும் அந்த பூனையை பாராட்டினர், அடுத்த நாளும் வருவதாக கூறி சென்றனர். இப்படி யோஹே கொண்டு வரும் மீன்கள் அணைத்தும் விற்று போயின, அவன் தந்தையையும் அவனால் கவனித்து கொள்ள முடிந்தது.



அந்த நாள் முதல் பூனை யோஹே விடமே தங்கி விட்டது.
அது ஒவ்வொரு நாளும் மீன் வாங்குபவர்களை யோஹே
வின் வீட்டுக்கே அழைத்து வந்தது. இந்த அதிசிய பூனையை
காண்பதற்கே மக்கள் எங்கெங்கிருந்தோ வந்தார்கள்.
யோஹே முன்பை விட நிறைய மீன்களை விற்றான்.
விரைவில் ஒரு கடையையும் ஆரம்பித்தான்.
தன் தந்தைக்கு நல்ல மருந்துகளை அவனால் வாங்கி தர
முடிந்தது.மற்ற மீன் வியாபாரிகளும் தம்மிடமும் இப்படி ஒரு
புத்திசாலி பூனை இருந்திருந்தால் நன்றாயிருக்குமே என்று
ஆசை பட்டனர்.





இப்படி தான் கையசைத்து சைகை காட்டும் பூனை அதிர்ஷ்டத்திற்கான ஒரு சின்னமாகியது. ஊர் மக்கள் பீங்கானில் யோஹே வின் பூனையை போல் சைகை காட்டும் பொம்மை பூனையை செய்ய ஆரம்பித்தனர். எல்லா வகை வியாபாரிகளும் தங்கள் கடைகளில் அதை வைக்க ஆரம்பித்தனர் ஏனெனில் அது அவர்களுக்கு புது வாடிக்கையாளர்களை கொண்டு வரும் என்றும் பழைய வாடிக்கையாளர்களை திரும்ப வரவழைக்கும் என்ற நம்பிக்கையில்.

நீங்கள் ஜப்பான் நாட்டிற்கு சென்றால் அல்லது உலகில் உள்ள எந்த ஆசிய- உணவகத்திற்கும் சென்றால் கையசைத்து சைகை காட்டும் பூனை பொம்மையோ அல்லது படமோ இருக்கிறதா என்று பாருங்கள் அப்படி இருந்தால் உங்களுக்கு நன்றாகவே தெரியும் ஏன் அது அங்கு இருக்கிறது என்று.



முற்றும்